# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


மனு எண்:0279/ஊராட்சி/2017

ஆணை எண்:027/2017

நாள்:14.03.2017

திரு எஸ். நாகராஜன்,
ஒட்டல் சரண்யா (P) லிமிடெட்,
நெ. 68, மீனாட்சிபுரம் ரோடு,
நாகர்கோவில்.

– மனுதாரர்

சிப்காட் அதிகாரிகள்,
சென்னை.

– எதிர் மனுதாரர்கள்

## ஆணை:

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுகா, நாகர்கோவில், மீனாட்சிபுரம் பகுதியில் வசிக்கும் திரு. எஸ். நாகராஜன் அவர்களின் 28.02.2017 நாளிட்ட மனுவில், அவர் மீனட்சிபுரம் பகுதியில் ஒட்டல் கட்டி வியாபாரம் செய்ய சிப்காட் (SIPCOT) நிறுவனத்திடம் ரூபாய் 125 லட்சம் கடனாக பெற ஆணை பெற்றதாகவும், ஆனால் சிப்காட் அதிகாரிகள் ரூபாய் 122.83 லட்சம் மட்டுமே கிடைக்குமாறு செய்தனர் என்றும் அவர் அடுக்கு மாடி ஒட்டல் கட்டிக் கொண்டிருக்கும் நிலையில், வாங்கிய கடனை அதிகாரிகள் கூறிய புதிய ஷெட்யூல்படி உடனே திருப்பி கட்டும்படியும், 07.10.1997ல் சொத்தை கையகப்படுத்துவதாக சொல்லி மிரட்டினர் என்றும், இதனால் ஒட்டல் கட்டும் பணி பாதிப்படைந்ததாகவும் கடனை திருப்பி செலுத்த 2006 வரை அவகாசம் தரப்பட்டிருந்தும், ரூபாய் 25 லட்சம் லஞ்சம் கொடுக்காத காரணத்தினால் சிப்காட் நிர்வாக இயக்குநரக அதிகாரிகள் ஒட்டலை நடத்தவிடாமல் சீல் வைக்கும் முயற்சியில் ஈடுப்பட்டு மூடிவிட்டனர் என்றும், இதன் காரணமாக தான் பெரும் கடனாளியாக மாறி மிகவும் பாதிப்படைந்ததாக தெரிவித்து, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. இம்மனுவில் குறிப்புட்டுள்ள சிப்காட் (SIPCOT) அலுவலர்கள், 2014 –ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (11)-ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள "பொதுப் பணியாளர்கள்" என்ற வரையறைக்குள் உட்பட்டவர்கள் அல்ல. எனவே இம்மனு இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு உகந்தது அல்ல எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017
செயலாளர்.

7/4/17

பெறுநர்
திரு. எஸ். நாகராஜன்,
ஓட்டல் சரண்யா (P) லிமிடெட்,
நெ. 68, மீனாட்சிபுரம் ரோடு,
நாகர்கோவில் – 629 001.

உதிரி–5